Inspector of Police, Vigilance & Anti Corruption, Tiruvannamalai District.

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

Under Section 173 BNSS (~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101973

District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **02/2026** Date: நாள் **23.02.2026**

(i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் **18.02.2026**
   Date to : நாள் வரை **12.30 hrs**
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் -
   Time to : நேரம் வரை -

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **23.02.2026**
   Time நேரம் **09.00 hrs**

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I**
   Time நேரம் **09.00 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **35 Kms North**

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி **Complainant's House, Polur, Tiruvannamalai District.**

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.M.Chinnarasu**

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Murugan**

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-30**

   (d) Nationality : நாட்டினம் **Indian**

   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்

   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் **Wage Work (Coolie)**

   (g) Address : முகவரி **No.12/40, V.S. Pillaiyar Kovil Street, Polur, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Sakthivel, Surveyor, Polur, Tiruvannamalai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

---

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

---

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 23.02.2026 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் திரு.மு.சின்னராசு, த/பெ. முருகன், எண்.12/40, வி.எஸ்.பிள்ளையார் கோயில் தெரு, போளூர், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: நாள்:23.02.2026 விடுநர் திரு.மு.சின்னராசு, வயது.30 த/பெ. முருகன், எண்.12/40, வி.எஸ்.பிள்ளையார் கோயில் தெரு, போளூர், திருவண்ணாமலை மாவட்டம்:. (Cell: 81225 12214) பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை ஐயா, பொருள்: வீட்டை அளக்க இலஞ்சமாக ரூ.5000/- கேட்ட போளூர் சர்வேயர் சக்திவேல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது – சம்மந்தமாக.

இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23.2.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

23.02.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.02.2026 at 10.00 hrs

Name: பெயர்
Rank: நிலை ..... No. எண் .....

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 9-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். போளூரில் உள்ள ரயில்வே கேட் அருகில் ரேவதி பீரோ பட்டறையில் கூலிவேலை செய்து வருகிறேன். என்னுடைய தந்தையார் முருகன் என்பவர் கடந்த 2017-ஆம் ஆண்டும், என்னுடைய தாயார் செல்வி என்பவர் கடந்த 2023-ஆம் ஆண்டு இறந்துவிட்டார்கள். எனக்கு சுரேஷ் மற்றும் இராஜசேகர் என்ற இரண்டு மூத்த சகோதரர்கள் உள்ளனர். போளூர் நகரம் சர்வே எண்.1208/14-இல் கூட்டு பட்டா எண்.3032 இருந்த 1055 சதுரஅடி அளவுள்ள வீட்டு மனையில் என் தந்தை முருகன் என்பவர் தனக்கு கிடைத்த 702 சதுரஅடி மனையில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு வீடு கட்டியுள்ளார். நான் என்னுடைய மூத்த அண்ணன் சுரேஷ் என்பவருடன் பூர்வீக வீட்டில் வசித்து வருகிறேன். என்னுடைய சகோதரர்கள் இருவருக்கும் திருமணமாகி தனித்தனியாக வீடு உள்ளதால், எனது தந்தை பெயரில் உள்ள வீட்டினை பாகப்பிரிவினை பத்திரம் செய்து போளூர் சார்பதிவாளர் ஆவண எண்.468/2026-இன்படி 02.02.2026-ஆம் தேதி எனது பாகமாக பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த 18.02.2026-ஆம் தேதி காலை சுமார் 10 மணியளவில் எனது செல்போன் எண். 8122512214-க்கு, 7010565064 என்ற எண்ணில் இருந்து தான் போளூர் டவுன் சர்வேயர் பேசுவதாகவும் அவர் எனக்கு பாகமாக கிடைத்த வீட்டினை பார்வையிடப்போவதாகவும், பாகப்பிரிவினை பத்திரத்தை எடுத்துக்கொண்டு போளூர் மணியக்காரர் அலுவலகத்திற்கு வருமாறும் கூறினார். நான் என்னுடைய பாகப்பிரிவினை பத்திரத்தை எடுத்துக்கொண்டு போளூர் மணியக்காரர் அலுவலகத்திற்கு அன்றே சென்று, சர்வேயர் சக்திவேல் என்பவரை சந்தித்த போது மேற்படி இடத்தை பார்க்க வேண்டும் என்று கூறியதால், நான் அவரை அழைத்துக்கொண்டு என் வீட்டினிடம் பகல் சுமார் 12 மணிக்கு வந்து வீட்டினை காண்பித்தேன். அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு வீட்டினை அளந்து முடித்தவுடன் பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி அதற்கான ஏற்பாடுகள் செய்ய என்னிடம் ரூ.6,000/- இலஞ்சமாக கேட்டார். நான் அதற்கு என்னால் அவ்வளவு பணம் தர முடியாது என்று கேட்ட போது, அதற்கு அவர் வேண்டுமானால் ரூ.1,000/- குறைத்து ரூ.5,000/- இலஞ்சமாக கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என கூறி சென்றுவிட்டார். அதன்பிறகு 20.02.2026-ஆம் தேதி பகல் சுமார் 12 மணியளவில் எனது செல்போன் எண். 8122512214-விற்கு, 7010565064 என்ற எண்ணில் இருந்து சக்திவேல் அவர்கள்

தொடர்பு கொண்டு நான் கேட்டது என்ன ஆச்சு என்று கேட்டார். நான் எனது குடும்ப சூழ்நிலையை எடுத்து கூறினேன், அவர் திரும்பவும் தான் கோரியபடி பணம் ரூ.5,000/- இலஞ்சமாக கொடுத்தால்தான் உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என திட்ட வட்டமாக கூறிவிட்டார். எனது பாகத்தை கூட்டு பட்டாவிலிருந்து பிரித்து எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய இலஞ்சமாக ரூ.5,000/- கேட்ட போளூர் சர்வேயர் சக்திவேல் என்பவருக்கு இலஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் தெரிந்த நபர் மூலம் புகார் மனு தட்டச்சு செய்து இன்று 23.02.2026-ஆம் தேதி திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் மனு அளிக்கிறேன். எனவே உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய இலஞ்சமாக பணம் ரூ.5,000/- கேட்ட போளூர் சர்வேயர் சக்திவேல் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (Sd XXXXX) M.சின்னராசு. 23.2.26

Sir,

Received the complaint on 23.02.2026 at 07.30 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 23.02.2026 at 09.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.02/2026, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) இரா.அருள்பிரசாத், கா.ஆ 23.02.2026 காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு, திருவண்ணாமலை

The FIR in original along with the complaint is being sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tiruvannamalai and the other copies to the officers concerned.